முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29 திகதி முதல்

சோபகிருது வருடம் தை மாதம் 07 திகதி வரை

(14.01.2024 ஞாயிறு முதல் 21.01.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மாதவராஜனே ஆறுமுக அரங்கா
மண்ணுலகில் ஞானவழி காட்ட
ஆதரவாய் சன்மார்க்க நெறிபுகட்டி
ஆறுமுகனார் வழிபாட்டை அருளுகின்ற
2. அருளுகின்ற ஞானியே உமைபோற்றி
அகிலமதில் அரங்கன் நீகேட்க
வரமென இந்தியா தமிழகத்தில்
வல்லமைபட சோபகிருது சிலைதிங்கள் இருபான்நவ திகதிமேல்
3. மேலாக கலைதிங்கள் சப்தம திகதிவரை
மேதினியில் நடக்கும் நிகழ்வாக
காலமதில் வருங்கால பலன்குறித்த ஆசி
கண்டுரைப்பேன் அகத்திய மகரிஷி யானும்
4. யானுரைக்க அரங்கன் காட்டும்
உண்மை வழிகளாம் தருமவழிகளை
ஞானமாக ஏற்று கலியுக மக்கள்
நம்பிக்கை வைத்து வருதல் காண
5. காணவே நடைமுறையில் இருக்கின்ற
கட்டமான ஆளுமை செயல்பாடுகள்
ஞானமிலா ஊழல் முறைகேடுகள்
நயவஞ்சகமான அபகரிப்புகள் அனைத்தும்
6. அனைத்தும் முடிவுகண்டு மாற்றம்
ஆன்மீக ஞானபலம் கொண்டோர்
துணைபட தருமஞான ஆட்சியாக
தமிழகம் இந்தியா கண்டடைந்து

7. அடைந்துமே மக்களை காக்கின்ற
அத்தியாவசிய தேவை பூர்த்திபட
தடையற சுயநலம் பதுக்கலின்றி
தயவாக செயல் திட்டங்கள்தனை
8. தன்னை நிறைவேற்றும் ஆளுமையாக
தவராஜன் ஆசி பெற்றவர்களாக
அன்னதான பலம் அறிந்தவர்களாக
ஆறுமுகனாரை வணங்கி பலம்கண்ட
9. கண்ட மாந்தர்களாக ஞானிகளாக
கலியினில் நிலை உயர்ந்து
உண்டாக்குவர் ஞான ஆட்சியை
உலகே வியக்க நல்லாட்சி தந்து
10. தந்துமே பேரற்புதம் படைப்பர்
தவசி அரங்கன் சக்தி பெருக
விந்தை புரிவர் கலியில் ஞானிகளாக
விளம்பிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 07ம் நாள் 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லா தவம் செய்து வெற்றி கண்டிட்ட ஆறுமுக அரங்க மகானே இவ்வுலக மக்களுக்கு ஞான வழிகாட்டி கடைத்தேற்றிடவே உத்தம உண்மை ஞான நெறியாம் சன்மார்க்க நெறியினை புகட்டி ஞானத்தின் தலைவனாம் முருகப்பெருமானின் வழிபாட்டினை மக்களுக்கு அருளி காக்கின்ற அவதார ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை போற்றியே சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 07ம் நாள் 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே இந்தியா தமிழகத்திலே நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆறுமுக அரங்க மகா தேசிகனார் காட்டுகின்ற உண்மை தரும ஞான நெறிமுறைகளை உலக மக்கள் ஏற்று முழு நம்பிக்கையுடன் கடைப்பிடித்து வரவர நடைமுறையில் உள்ள சில கஷ்டமளிக்கும் ஆளுமையின் செயல்பாடுகள் எல்லாம் மாறும், ஞானமற்ற ஊழல் குறையும், முறைகேடுகளும் மாறும் நயவஞ்சகமான அபகரிப்புகள் முடிவிற்கு வரும். ஞானபலம் மிகுந்தவர்கள் துணையுடன் தரும ஞான ஆட்சியாக தமிழகமும் இந்திய தேசமும் கண்டு மக்களை காக்கின்ற நல்லாட்சியாக மாறி மக்களின் அத்தியாவசிய தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும், சுயநலம் இல்லாத ஆட்சியாக பதுக்கல் இல்லாத ஆட்சியாக மாறி தயவு மிக்க செயல்திட்டங்கள் செயல்படுத்தப்படும் நல்லாட்சியாக மாறும்.

தவராசன் அரங்கன் காட்டும் அறநெறியில் செல்லுகின்றவர்களாக அரங்க மகான் ஆசி பெற்ற அன்பர்களாக அன்னதான பலத்தினை அறிந்த தர்மவான்களாக முருகப்பெருமானை வணங்கி ஆசி பெற்றவர்களாக அவர்கள் மாறி நிலை உயர்ந்து கலியுக இடர்களை வென்று ஞானம் பெற்ற ஞானிகளாகும் வாய்ப்பும் பெற்று உலகமே வியக்கும் வகையிலே நாட்டினில் நல்லாட்சி தந்து பேரற்புதம் படைப்பார்கள். அரங்க மகானின் சக்தி பெருக பெருக அவரெல்லாம் அரங்க மகானின் ஆசியினாலே அற்புதம் பல புரிவார்கள் கலியுகத்திலும் மாயையை வென்ற ஞானிகளாகவும் ஆகியே விந்தை புரிவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–